# திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப.,

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவராக திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் உள்ளார். இவர் 2008ம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணித் தொகுப்பைச் சேர்ந்தவர் ஆவார். இவர் மகாராஷ்டிராவில் உள்ள மகாத்மா பூலே கிருஷி வித்யாபீத் ரஹுரி கல்லூரியில் வேளாண்மைப் பிரிவில் இளங்கலை பட்டமும், இந்திராகாந்தி திறந்த நிலை பல்கலைக் கழகத்தில் பொது கொள்கை பிரிவில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். இவர் இதற்கு முன்பு கோயம்புத்தூரில் உதவி ஆட்சியராகவும், ஓசூரில் துணை ஆட்சியராகவும் பின்னர் தலைமைச் செயலகத்தில் நிதித்துறையில் (பட்ஜெட்) துணைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் இவர் திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியராகவும் பணிபுரிந்தவர் ஆவார். கன்னியாகுமரி மாவட்டத்தில் 23.02.2018 முதல் மாவட்ட ஆட்சித்தலைவராகப் பணிபுரிந்து வருகிறார்.